# தொலைதூர ஒட்டப்பந்தயத்தில் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி மாணவிகள் சாதனை!!!

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய கல்லூரிகளுக்கு இடையேயான தொலை தூர ஓட்டப்போட்டி 21கி.மீ (Inter-collegiate 21km Half Marathon) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உடற்கல்வியல் கல்லூரி வளாகத்திள் 16/12/2016 அன்று காலை 7.00 மணி அளவில் நடைபெற்றது இதில் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட பல்வேறு கல்லூரிகளில் இருந்து மாணவிகள் பங்கு பெற்றனர்.

21 கி.மீ தொலை தூர ஒட்டப்பந்தயத்தில் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி மாணவிகள் D.செல்வமணி (முன்றாமாண்டு - தமிழ் துறை) பந்தய தூரத்தை 1 மணி 52 நிமிடங்களில் கடந்து **முதலாவது** இடத்தையும் P. முத்துரமா (முன்றாமாண்டு - கணிதவியல்) பந்தய தூரத்தை 1 மணி 53 நிமிடங்களில் கடந்து **இரண்டாவது** இடத்தையும் பெற்று எம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

இந்த சாதனை மாணவிகளையும் பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குநரையும் கல்லூரியின் தலைவர், செயலா் மற்றும் துணைச் செயலர், முதல்வர், இயக்குநர் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் பாராட்டினர்.